செ.வெ. எண்: 472 நாள்: 10.08.2012

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னையில் 11 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஆகஸ்ட் 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் 11.08.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 11 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | அரசினர் முஸ்லீம் மகளிர் உயர்நிலைப்பள்ளி, எண்.2, அம்மன் கோயில் தெரு, ஆசீர்வாதம் , பிராட்வே, சென்னை-108 |
| 2 | இராயபுரம் | சென்னை மேல்நிலைப்பள்ளி, எண் 731, T.H ரோடு, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை-81 ( தமிழ்நாடு தியேட்டர் அருகில்) |
| 3 | திருவொற்றியூர் | தரம் இந்துஜா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி பூந்தோட்ட தெரு, திருவொற்றியூர் ( போஸ்டாப்பிஸ் அருகில்) |
| 4 | தி.நகர் | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி , அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை- 26 |
| 5 | மயிலாப்பூர் | சமுதாய நலக்கூடம், 29 சி .பி ராமசாமி சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-18 |
| 6 | பரங்கிமலை | அரசினர் மேல்நிலைப்பள்ளி மூவரசன் பேட்டை ( குளம் அருகில், மடிப்பாக்கம், சென்னை 91 |
| 7 | தாம்பரம் | பீர்க்கன் கரணை பேரூராட்சி அலுவலகம், பீர்க்கங்கரணை, புதுப்பெருங்களத்தூர், சென்னை 63 |
| 8 | சைதாப்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி, எண். 21, பெருமாள் கோயில் தெரு, மேட்டுப்பாளையம், மேற்கு மாம்பலம், சென்னை 33 |
| 9 | ஆயிரம்விளக்கு | அரோமா நர்சரி பள்ளி , அஷ்டபுஜம் சாலை, சூளை, சென்னை 112 |
| 10 | சேப்பாக்கம் | CSI நடுநிலைப்பள்ளி , புதுப்பாக்கம், பாரதி சாலை, இராயப்பேட்டை, சென்னை 14 |
| 11 | சோழங்கநல்லூர் | பெரும்பாக்கம் ஊராட்சி சமூக நலக்கூடம், சென்னை 100 (பெரும்பாக்கம் பஸ் நிலையம் அருகில்) |

பெ.மு.பஷீர் அஉறமது
ஆணையாளர்
ஆணையாளருக்காக

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**